பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
20 10 2025 6.45
திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. தமிழக மீனவர்களின் பாதுகாப்பிற்கு மத்திய அரசு எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

2. தீப ஒளித் திருநாளாம் தீபாவளிப் பண்டிகை நாடு முழுவதும் இன்று வழக்காமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

3. வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக உள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

4. மழைக் காலத்தின்போது மருத்துவமனைகள் மற்றும் நீரேற்றும் நிலையங்களில் மின்சாரம் தடைபடாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் மல்யுத்தத்தில் இந்தியா முதலாவது பதக்கத்தை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

< < < < > > > >

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு தமிழக மீனவர்களின் நலனுக்கும், பாதுகாப்பிற்கும் எப்போதும் உறுதுணையாக இருக்கும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மோசமான வானிலை காரணமாக கன்னியாகுமரி மாவட்டம் வல்லவிளையைச் சேர்ந்த மீனவர்கள் ஆழ்கடலில் சிக்கிய தகவல் அறிந்தவுடன் அவர்கள் பாதுகாப்பாக கரை திரும்ப தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.

மீனவர்களின் செயற்கைக்கோள் தொலைபேசி செயலிழந்து விட்ட தகவல் அறிந்தவுடன் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்துடன் இணைந்து இணைப்பை தற்காலிகமாக மீட்டெடுக்கும் பணியில் தொலைதொடர்பு துறையும், BSNL நிறுவனமும் ஈடுபட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

*தீப ஒளித் திருநாளாம் தீபாவளிப் பண்டிகை நாடு முழுவதும் இன்று வழக்காமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.*

*மக்கள் அதிகாலையிலேயே எழுந்து எண்ணெய் தேய்த்துக் குளித்து*

*புத்தாடை அணிந்து பட்டாசுகள் வெடித்து இனிப்புகளைப் பரிமாறி இந்நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருவதாக எமது கோவை மாவட்ட செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

***(Voice Byte - Hariharan - 48 Sec)***

*இந்நாளையொட்டி தலைவர்கள் பலர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், தீப ஒளித் திருநாள் ஒவ்வொரு குடிமகனின் வாழ்க்கையிலும் நல்லிணக்கம், மகிழ்ச்சி, செழிப்பு ஆகியவற்றை ஏற்படுத்தி ஒளிரட்டும் என்று கூறியுள்ளார்.*

*அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், இந்நாளில் நாடெங்கும் அன்பும் அமைதியும் தழைத்து, துன்பங்கள் கரைந்து ஒளிமயமான எதிர்காலம் பிறக்கட்டும் என்று கூறியுள்ளார்.*

*தீபாவளி திருநாளில் நாட்டு மக்கள் அனைவரின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி நிறையட்டும் என்றும், அனைவரும் ஒன்றிணைந்து பாதுகாப்பாக தீபாவளியைக் கொண்டாடுவோம் என்றும் பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.*

*தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப் பெருந்தகை*

*வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், பாதுகாப்பாகவும், மத நல்லிணக்கத்தின் அடையாளமாகவும் இப்பண்டிகையை கொண்டாடுவோம் என்று கூறியுள்ளார்.*

<<<<>>>>

*தீபாவளி பண்டிகையை ஒட்டி தீக்காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் தயார் நிலையில் இருக்குமாறு பொது சுகாதாரத்துறை கேட்டுக்கொண்டுள்ளது.*

அத்தியாவசிய மருந்துகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், பெரிய காயங்கள் ஏற்பட்டால் முதலதவி சிகிச்சை அளித்து மாவட்ட தலைமை மருத்துவமனை அல்லது மருத்துக்கு கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள், 24 மணி நேரமும் பணியில் இருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை, ஆவடியில் விற்பனைக்காக ஒரு வீட்டில் பட்டாசுகள் வைக்கப்பட்டிருந்தபோது அது வெடித்து 4 பேர் உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து தீயணைப்புத் துறையினரும், காவல்துறையினரும் விரைந்து சென்று இடிபாடுகளில் இருந்து சடலங்களை மீட்டனர்.

< < < < > > > >

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தமிழக அரசு தயாராக உள்ளதாக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக மாவட்ட ஆட்சியர்களுடன் அவர் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

திருவாரூர், தென்காசி, விருதுநகர், ராமநாதபுரம், தேனி, கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய முதலமைச்சர், மழை காரணமாக நேரடி நெல்கொள்முதல் நிலையங்களில் பெறப்படும் நெல் மூட்டைகளை விரைவாக கிடங்குகளுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

< < < < > > > >

மழைக் காலத்தின்போது மருத்துவமனைகள் மற்றும் நீரேற்றும் நிலையங்களில் மின்சாரம் தடைபடாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சாரத்துறை அமைச்சர் திரு. சிவசங்கர் கூறியுள்ளார்.

மாநிலத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் அதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து சென்னையில் உள்ள மின்வாரிய தலைமை அலுவலகத்தில் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், துணை மின் நிலையங்களில் டீசல் ஜெனரேட்டர், நீர் வெளியேற்றும் மின்மோட்டார்கள் மற்றும் மணல் மூட்டைகளை தயார் நிலையில் வைத்திருக்க அறிவுறுத்தப்பட்டிருப்பதாக கூறினார்.

அரசு அலுவலகங்கள், வங்கிகள் மற்றும் செல்ஃபோன் கோபுரங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

< < < < > > > >

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளதால் இன்று மாநிலத்தின் அநேக இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

நீலகரி, கோவை, திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய 18 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் தமிழக கடலோரப் பகுதி, மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஆழ்கடலில் உள்ள மீனவர்கள் நாளைக்குள் கரை திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

< < < < > > > >

இந்தியாவுடன் உத்திசார் ஒத்துழைப்பை வலுப்படுத்த பிரேசில் மிகுந்த ஆவலுடன் இருப்பதாக அந்நாட்டின் அதிபர் திரு. Inacio Lula Da Silva தெரிவித்துள்ளார்.

< < < < > > > >

*ஆஃப்கனிஸ்தான் - பாகிஸ்தான் இடையே ஏற்பட்டள்ள சண்டைநிறுத்த ஒப்பந்தத்தை வரவேற்பதாக சவுதி அரேபியா கூறியுள்ளது.*

*< < < < > > > >*

*இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் எல்லைப் பாதுகாப்புப் படையினர் தீபங்களை ஏற்றி தீபாவளியைக் கொண்டாடினர்.*

*< < < < > > > >*

*பழங்குடியின மக்களுக்கான நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தியதற்காக மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்றை அமைச்சகத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.*

*< < < < > > > >*

*ஈரோடு மாவட்டம் பெருந்துறைக்கு கர்நாடகாவில் இருந்து வேனில் கடத்தி வரப்பட்ட 2 டன் போதைப் பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்து ஒருவரைக் கைது செய்துள்ளனர்.*

*< < < < > > > >*

*சென்னையில் இருந்து நாகர்கோவில் வந்த குருவாயூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் இரண்டு பெணகளிடம் இருந்து 13 கிலோ போதைப்பொருளை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.*

*< < < < > > > >*

*மதுரை மாவட்டத்தில் தேவையான கிராமங்களில் நெல் வரத்திற்கு ஏற்ப கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.*

*< < < < > > > >*

*சீனாவில் இருந்து சரக்குப் பெட்டகத்தில் தூத்துக்குடி துறைமுகத்திற்கு கடத்தி வரப்பட்ட சுமார் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டாசுகளை சுங்கத்துறையினர் பறிமுதல் செய்து 4 பேரை கைது செய்தனர்.*

*< < < < > > > >*

*பணியின்போது உயிரிழந்த காவலர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நாளை காலை ஏழரை மணி முதல் 9 மணி வரை நடைபெற உள்ளதால் கடற்கரை காமராஜர் சாலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

<<<<>>>>

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

***ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டியில் இந்தியா முதலாவது பதக்கத்தை வென்றுள்ளது.***

***பஹ்ரைனில் நடைபெற்று வரும் இப்போட்டியில் நேற்று மகளிருக்கான 70 கிலோ எடைப்பிரவு மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் Khushi வெண்கலப் பதக்கம் வென்றார்.***

---

<<<<>>>>

***உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி போராடி தோல்வியுற்றது.***

***இந்தூரில் நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 288 ரன் எடுத்தது.***

***289 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய இந்தியா, 50 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 284 ரன் எடுத்தது.***

***இதனால் இந்தியா 4 ரன் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தது.***

***இன்று மாலை 3 மணிக்கு மும்பையில் நடைபெறும் ஆட்டத்தில் இலங்கை - பங்களாதேஷை எதிர்கொள்கிறது.***

---

<<<<The End>>>>